**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 57** **நாள் : 22.03.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் 2025-26ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையினை மேலும் அதிகரித்திடும் வகையில், தீவிர மாணவர் சேர்க்கை பிரச்சாரப்பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் 2025-26ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையினை மேலும் அதிகரித்திடும் வகையில், தீவிர மாணவர் சேர்க்கை பிரச்சாரப்பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் ரிப்பன் கட்டட வளாகத்தில் மாணவர்கள் சேர்க்கைக்கான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு, பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்கி, 45 ஆட்டோக்களில் விளம்பரப் பிரச்சாரத்தினை இன்று (22.03.2025) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 206 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 417 சென்னை பள்ளிகள் மற்றும் அதனுடன் 336 மழலையர் வகுப்புகளில் LKG, UKG முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. 417 பள்ளிகளிலும் சிறப்பான கட்டுமான வசதிகளுடன் சென்னை பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்கள் பயனடையும் விதமாக பல்வேறு வகையான நலத்திட்டங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக மழலையர் பிரிவில் காற்றோட்டமான வகுப்பறைகள், பச்சை வண்ணப்பலகைகள், Smart Board, விளையாட்டுடன் கல்வியில் ஆர்வத்தினை தூண்டக்கூடிய வண்ண மயமான LKG/UKG புத்தகங்கள், புத்தகப்பைகள், காலணிகள், அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது.

சென்னை பள்ளிகளில் தூய்மையான குடிநீர், சுகாதாரமான கழிப்பறைகள், நவீனஆய்வகங்கள், நவீனமயமாக்கப்பட்ட பலவிதமான பள்ளி விளையாட்டு மைதானங்கள் போன்ற பல்வேறு வசதிகளுடன் மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இங்கு பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளிச்சீருடைகள், எழுது பொருட்கள், பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், காலைச்சிற்றுண்டி, பள்ளிக்கு 100% வருகைபுரியும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையும், மேல்நிலைக்கல்வியில் பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கு மாலை சிற்றுண்டியுடன் (Snacks) கூடிய மாலைநேர சிறப்பு வகுப்புகள், 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையும், மேல்நிலைக்கல்வி முடித்து மேற்படிப்பு பயில

ஊக்கத்தொகைகள் மற்றும் அனைத்து வகுப்பு மாணாக்கர்களுக்கும் சிறப்பு விளையாட்டுப்பயிற்சிகள், தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கான பயிற்சி, சாரண/ சாரணியர் இயக்கம், கணினிபயிற்சிகள், தையற்பயிற்சி, தற்காப்புகலைகளான குத்துச்சண்டை, கராத்தே, சிலம்பம் பயற்சி கற்பிக்கப்படுகிறது. மேலும், மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் விதமாக கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்நிலையில், வருகின்ற 2025-2026 கல்வி ஆண்டில் சென்னை பள்ளிகளில் மென்மேலும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், பொதுமக்களிடையே சென்னைப்பள்ளிகளின் சிறப்பினை எடுத்துரைக்கும் விதமாக "**தீவிர மாணவர் சேர்க்கைப் பிரச்சாரம்**" (Admission Propaganda) மேற்கொள்ளும் பணி இன்று (22.03.2025) முதல் தொடங்கப்பட்டது.

இப்பிரச்சாரமானது மண்டலத்திற்கு 3 ஆட்டோக்கள் வீதம் 15 மண்டலங்களுக்கும் மொத்தம் 45 ஆட்டோக்களில் 3 மாதங்களுக்கு (மார்ச்-22 முதல் ஜூன்-22 வரை) வாரத்தில் மூன்று நாட்களுக்கு வெள்ளி, சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் மேற்கொள்ளப்படும்.

மேலும், பள்ளிகளின் அருகிலிருக்கின்ற தெருக்கள் மற்றும் வீடுகள்தோறும் ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் சென்று மாணவர், உடனடி சேர்க்கையும் (Spot Admission) நடைபெற்று வருகிறது. சென்னை பள்ளிகளில் மார்ச் மாதம் 1 ஆம் தேதி முதல் இதுவரை 3500 புதிய மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவநாதன், வட்டார துணை ஆணையர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), மாமன்ற உறுப்பினர் திரு.ரா. ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.